








# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 2 இதழ் 2 22.01.2026



ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

# உள்ளே

படித்து
பின்பற்ற வேண்டிய
முத்துக்கள்
உபதேசங்கள்

# முத்துக்கள்



## எம்பெருமானே உபாயம் என்ற மஹாவிச்வாஸம் (ஆழ்ந்த நம்பிக்கை)-- எம்பார்

பிரபத்தியின் அங்கங்களைப் பற்றி விளக்கிக் கூறும் அதிகாரம் பரிகரவிபாக அதிகரமாகும். பக்தி பிரபத்தி ஆகிய இரண்டுமே மோக்ஷத்தை அடைவதற்குரிய உபாயங்களாகும். உயிருள்ளவரை விடாமல் தொடர்ந்து செய்தல், உயிர்பிரியும்போதும் பகவானைப் பற்றிய நினைவுடன் இருத்தல் முதலிய பல கடினமான நிர்ப்பந்தங்கள் பக்திக்கு உண்டு. பிரபத்தி என்பது மிகவும் எளிதான உபாயம் என்றாலும் பிரபத்தியின் அங்கங்களுள் ஒன்றான மஹாவிச்வாஸம் (ஆழ்ந்த நம்பிக்கை) என்பது ஒருவனுக்கு ஏற்படுவது மிக மிக அரிது என்பதை விளக்கும் வகையில் எம்பார் அருளிச்செய்த கதை ஒன்று எடுத்துக் காட்டப்படுகிறது.

"கல எள்ளுக் கட்டுப் போய் கல எண்ணெய் ஆயிற்று" என்று எம்பார் அருளிச்செய்வராம். (ஒரு கல எள்ளுக் கட்டிலிருந்து ஒரு கல எண்ணெய் கிடைப்பது எவ்வளவு அரிதோ அவ்வளவு அரிது மஹாவிச்வாஸம் பிறப்பதும் என்பது எம்பார் திருவுள்ளம்போலும்!) இங்கு ஒரு கதை கூறப்படுவதுண்டு. எண்ணெய் வியாபாரி ஒருவன் மரச்செக்கு ஒன்று செய்வதற்காக ஒரு மரத்தை வெட்டச் சென்றபோது, அம்மரத்தில் வசித்து வந்த பிசாசு ஒன்று, மரத்தை வெட்ட வேண்டாம் என்றும், அதற்கு பதிலாக தினந்தோறும் ஒரு கல எள்ளுக் கட்டு அவனுக்குக் கொடுப்பதாகவும் கூறியது. அவனும் மரத்தை வெட்டாமல் சென்று விட, பிசாசும் தினந்தோறும் அவனுக்கு ஒரு கல எள்ளுக்கட்டைக் கொடுத்து வந்தது. அதே மரத்திற்கு வசிக்க வந்த மற்றொரு பிசாசு, இதைக் கண்டு,

'மனிதனுக்கு பயப்பட்டுக் கொண்டு தினமும் எள்ளுக் கட்டு எதற்காகக் கொடுக்க வேண்டும்? நான் அவனை ஒழித்து விடுகிறேன்' என்று கூறி, அவனுடைய இல்லத்திற்குச் சென்றது. வியாபாரியினுடைய இல்லத்தில் முரட்டு மாடு ஒன்று இருந்தது. அது அந்த வியாபாரியின் மகன் ஒருவனுக்கு மட்டுமே அடங்கும், வேறு எவர்க்கும் அடங்காது. இந்தப் புதிய பிசாசு அங்கே சென்ற சமயத்தில், அந்த வியாபாரி தன்னுடைய மாட்டுக் கொட்டிலில் கட்டியிருந்த முரட்டு மாட்டை இழுத்துவரும்படி தன்னுடைய மகனிடம் கூறிக் கொண்டிருந்தான். 'அந்த முரட்டுப் பிசாசை இழுத்துவா' என்று அவன் தன்னுடைய மகனிடம் கூறிக்கொண்டிருந்ததைக் கேட்ட பிசாசு தன்னைத் தான் இழுத்துவரும்படி கூறுகிறான் என்றெண்ணியது. வியாபாரியின் மகனே தன்னை இழுத்துச் செல்லுமளவுக்கு வலிமை உடையவனாக இருந்தால், வியாபாரி இன்னும் வலிமை அதிகமாக உடையவனாக அன்றோ இருப்பான், அவன் தன்னை என்ன செய்து விடுவானோ என்றஞ்சி, அவனிடம் சென்று "என்னை ஒன்றும் செய்துவிடாதே! நான் உனக்கு தினந்தோறும் கல எண்ணெயே கொடுக்கிறேன்" என்று கூறியது. கல எள்ளுக் கட்டு கொடுப்பது சிரமமானது என்று தவிர்க்கப்போய், அது கல எண்ணெயாக, இன்னும் சிரமத்தில் முடிந்தது என்பது போல, பக்தியை அனுஷ்டிப்பது சிரமமானது என்று பிரபத்தியைச் செய்யப்போனால், எம்பெருமானே உபாயம் என்ற மஹாவிச்வாஸம் (ஆழ்ந்த நம்பிக்கை) உண்டாவது இன்னும் சிரமமானது என்ற கருத்து இக்கதையால் கூறப்படுகிறது.

******************************************************

அனைவரையும் காப்பவன் எம்பெருமான். முக்தர்களுக்குத் தன்னுடைய அனுபவத்தைக் கொடுத்துக் காக்கிறான்; மோக்ஷம் அடையவேண்டும் என்று விரும்புபவர்களுக்கு அவர்களுடைய ஸ்வரூபத்திற்குத் தகுதியாக (கைங்கர்யத்தைக் கொடுத்து) காக்கிறான். இவ்வுலகவாழ்க்கையில் கட்டுப் பட்டிருப்பவர்களை அவரவர்களுடைய கர்மங்களுக்குச் சேர அனுபவங்களைக் கொடுத்துக் காக்கிறான் .

******************************************************

ஒன்பது வாசல்களை உடைய லங்கையில் அரக்கிகளால் துன்புறுத்தப் பட்ட சீதைப் பிராட்டிக்கு அனுமனுடைய வரவு எப்படி மகிழ்ச்சியை உண்டாக்கிற்றோ அதுபோலவே, ஒன்பது ஓட்டைகளை உடைய இந்த உடலில் தாபத்ரயங்களால் துன்புறுத்தப்படுகின்ற சேதனனுக்கு

ஆசார்யனுடைய தோற்றரவு மகிழ்ச்சியை உண்டாக்கும்.

****************************************************

சிஷ்யனுடைய அறியாமையை அகற்றி, நல்ல ஞானத்தை அவன் அடையும்படி செய்து, எம்பெருமானிடத்தில் அவனுக்கு ஈடுபடு வளரும்படி செய்வதே ஆசார்யன் செய்யும் செயல்.

*******************************************************

*******************************************************

கர்மயோகம், ஜ்ஞாந யோகம், பக்தியோகம் முதலிய உபாயங்கள் பலமுறை செய்ய வேண்டிய உபாயங்கள்.  ப்ரபத்தியானது ஒரே ஒருமுறை செய்யப்படுவது.

**************"*************************************

எம்பெருமானையே உபாயமாகப் பற்றுதலும், அவனும் பிராட்டியுமான சேர்த்தில் அவர்களுடைய மகிழ்ச்சிக்காகத் தொண்டு செய்யவேண்டும் என்று பிரார்த்தித்தலும், பிரபந்நன் செய்ய வேண்டிய செயலாகும்.

****************************************************

தன்னுடைய திருவாராதனப் பெருமாளை ஒருவன் ஆராதிக்கும்போது, அரசனுக்கு உபசாரங்கள் செய்வது போல மிகவும் ச்ரத்தையுடனும், தன்னுடைய பிள்ளைக்குச் செய்வது போல மிக்க அன்புடனும், பாம்பைக் கண்டால் பயப்படுவது போல, தவறு நேரக்கூடாதே என்ற அச்சத்துடனும் இருக்க வேண்டும்.

****************************************************

